கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 244/2018

வாதி தரப்பு சாட்சி -3 மல்லிகா திருமதி.ஏ.பிரமோ பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 19.08.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அய்யாகண்ணு | கிராமம் | மஞ்சநாயக்கன்பட்டி |
| த/பெ / க/பெ. | ரத்தினம்பிள்ளை | தொழில் | விவசாயம் |
| தாலுக்கா | கடவூர் | மதம் | இந்து |
| ஜாதி | சோளியவெள்ளாளர் | வயது | 58 |

**2, 3, 5 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் செல்லாண்டிபுரத்தில் வசிக்கிறேன். தாவா பிரச்சனைக்குரிய இடம் இருப்பது மஞ்சநாயக்கம்பட்டி கிராமம் மாணிக்கபுரம் ஆகும்எ ன்றால் சரிதான். வாதியின் தகப்பனார் பெயர் ராஜலிங்கம். அவர் இறந்துவிட்டார். வாதிக்கு சகோதரர்கள் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். அவர்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இதே தாவா சொத்து சம்மந்தமாக வாதியின் தகப்பனார் ராஜலிங்கம் மற்றொரு வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரனம் எவ்வளவு என்றால் ஏக்கர் 7.13 செண்ட் ஆகும்.

2. அது வாதியின் தகப்பனாருக்கு பாத்தியம். தாவா சொத்திற்கு அருகே எனக்கு விவசாய நிலம் உள்ளதா என்றால் இல்லை. எனது பெரியப்பாவிற்கு உள்ளது. 07.07.1981 கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் இல்லை. அந்த பத்திரம் பதிவு செய்த போது உடன் இருந்தேனா என்றால் இல்லை. 26.06.1990 கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் இல்லை. அந்த பத்திரம் பதிவு செய்த போது உடன் இருந்தேனா என்றால் இல்லை. மேற்படி கிரைய ஆவணங்களை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 26.06.1990 ம் தேதியிட்ட கிரைய பத்திரம் ராஜலிங்கம் கிரையம் பெற்றாரா என்றால் ஆமாம்.

3. அந்த கிரைய பத்திரத்தில் கிரையம் கொடுத்தவர் தனக்கு உரிமையில்லாத பாத்தியத்தையும், அனுபவத்தையும் சேர்த்து கிரையம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா பாதை எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண்.77/13 ல் மேற்குபுறம் தென்வடல் பாதையாக உள்ளது. தாவா பாதையை ஒட்டி கிழக்கே தென்வடலாக நத்தம்பட்டி முதல் மாணிக்கம்புரம் ரோடு உள்ளது என்றால் பஞ்சாயத்து ரோடு உள்ளது. மேற்படி பஞ்சாயத்து ரோட்டிற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை. சர்வே எண்.77/13 ல் உள்ள பாதையின் அருகில் பிரதிவாதிகளின் நிலமும், நாயக்கர் சமூகத்தை சேர்ந்தவர்களின் நிலமும் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் நிலம் சர்வே எண்.75 என்றால் அது பற்றி தெரியாது.

4. சர்வே எண்.75 பிரதிவாதிகளின் சொந்த பட்டா நிலம் அதில் வேறு யாருக்கும் உரிமையும், பாதையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு செல்லாண்டிபுரம் சாலையிலிருந்து தெற்கிலிருந்து வடக்காக ஒரு பாதை உள்ளதா என்றால் இல்லை. வாதிகளுக்கு தாவா பாதையை தவிர வேறு பாதை உள்ளது என்றும், பிரதிவாதிகளை பொறுத்து பாதை உரிமை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வாதி எனக்கு உறவினரா என்றால் இல்லை. பழக்கவழக்கத்தில் நண்பர். வாதி எனக்கு நண்பர் என்பதால் இல்லாத பாதையை அவருக்கு ஆதரவாக இருப்பதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**
Kulithalai.